DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.44/2025

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | தீபிகா (Lw - 1) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 05.02.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். எனது கணவர் நாயகனுக்கும் எனக்கும் பிரச்சனை ஏற்பட்டு நாங்கள் பிரிந்து வாழ்கிறோம். இந்த நிலையில் எனக்கு இந்த வழக்கில் இறந்துபோன ராஜ்குமாருடன் பழக்கம் ஏற்பட்டு நாங்கள் இருவரும் ஒன்றாக சுமார் 2-1/2 வருடம் சேர்ந்து வாழ்ந்துவந்தோம்.

13.08.2022ம் தேதி ராஜ்குமார் என்னை பொட்டிரெட்டிப்பட்டியில் இருக்கும் எனது அம்மாவின் வீட்டில் விட்டுவிட்டு அவர் சம்பளம் வாங்குவதற்காக திருச்செங்கோடு செல்வதாக கூறிவிட்டுசென்றார். மாலை சுமார் 05.30 மணியளவில் நான் எனது அம்மாவின் வீட்டில் இருந்தபோது ராஜ்குமாருக்கு அலங்காநத்தம் பிரிவு அருகே டேங்கர்லாரி மோதி சாலை விபத்து ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் அவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தகவல் வந்தது.

நான் உடனே நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது ராஜ்குமார்

இறந்திருந்தார். சம்பவம் தொடர்பாக நான் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலிசார் மருத்துவமனையில் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை எங்களிடம் ஒப்படைத்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து எனக்கு தகவல் வந்தது என்றால் மாலை 05.30 மணிக்கு தெரியவந்தது. சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்தவுடன் நான் எங்கு சென்றேன் என்றால் சம்பவ இடத்திற்கு சென்று பின்னர் மருத்துவமனைக்கு சென்றோம். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் விபத்து காப்பீடு பெறவேண்டி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. புகார் மனுவை நான் தான் எழுதினேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரியல்ல. போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் எருமப்பட்டி காவல்நிலையத்தில் விசாரித்தார்கள்.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**